தினமலர்
# வாரமலர்
7.7.2024 நாளிதழுடன் இணைப்பு

# ஆடைகளாகும் பெட் பாட்டில்கள்

## ராணுவத்தின் சபாஷ் முயற்சி

சூழலை மாசுபடுத்தும் பிளாஸ்டிக் பாட்டில்களை மறுசுழற்சிக்கு உட்படுத்தி சூழலை காக்கும் முயற்சியில் பலரும் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு நடுவே வித்தியாசமாக அதே பணியை ராணுவ வீரர்களுடன் இணைந்து மேற்கொண்டுவருகிறது கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த ரங்கா பாலிமர்ஸ் என்ற நிறுவனம். கூடுதல் சிறப்பாக, அந்த பாட்டில்களை ஆடைகளாக மாற்றுகிறது.

“இந்திய ராணுவத்துடன் இணைந்து, ஜம்மு–காஷ்மீரின் லடாக் பகுதிக்கு வரும் சுற்றுலாப்பயணிகள் பயன்படுத்தி வீசும் தண்ணீர் பெட் பாட்டில்களை ஆடைகளாக மாற்றிக்கொடுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம்” என்று பேசத் தொடங்கினார் இந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர்களில் ஒருவரான செந்தில் சங்கர்.

“2008ம் ஆண்டு தொடங்கப்பட்ட எங்கள் நிறுவனத்தில், முதலில் காலி பெட் பாட்டில்களில் (PET – polyethylene terephthalate) இருந்து நூல் மட்டும் தயாரித்தோம். பின்னர், அதை வண்ண நூல்களாக மாற்றினோம். அதன் பின்னர்தான் ஜவுளி உற்பத்தி செய்ய ஆரம்பித்தோம்.

இப்போது ரெடிமேட் ஆடைகள் தயாரிக்கிறோம். இதை ‘எக்கோலைன்’ (EcoL–ine) ஆடைகள் எனலாம். அதாவது மறுசுழற்சி ஆடைகள். இந்தியாவில் பெட் பாட்டில்களை துணியாக மாற்றும் நிறுவனங்கள் பல இருந்தாலும், அவற்றை ஆடைகளாக மாற்றுவது எங்கள் நிறுவனம் மட்டும் தான். அதே போல, தண்ணீர் செலவு இல்லாமல், நூல்களில் கலர் செய்கிறோம். இதனால் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படாது” என்றவர், பெருமைக்குரிய ஒரு தகவலையும் குறிப்பிட்டார்.

“சமீபகாலமாக, எக்கோலைன் ஆடைகள் அணிவதில் மக்கள் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். இதற்கு காரணம் நாங்கள் தயாரித்துக்கொடுத்த எக்கோலைன் ஜாக்கெட்டை, கடந்த ஆண்டு பார்லிமென்ட்டிலும், ஜி7 மாநாட்டிலும் பிரதமர் மோடி அணிந்திருந்தார். அது எங்களுக்கு மிகப்பெரிய பெயரை வாங்கிக்கொடுத்தது. பெருமையாகவும் இருந்தது” என்றவர், இந்திய ராணுவத்துடன் இணைந்து பணியாற்றுவது பற்றி சொல்ல ஆரம்பித்தார்.

“லடாக் பிரதேசத்தில் உள்ள சியாச்சின், 11 ஆயிரம் அடிக்கு மேல் உயரம் கொண்டது. இங்கு நம் ராணுவ முகாம் உள்ளது. ஒருபக்கம் சீனாவும், மறுபக்கம் பாகிஸ்தானும் உள்ளது. கடுமையான சீதோஷண நிலையில் நம் ராணுவத்தினர் இங்கே பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

லடாக், சியாச்சின் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை சுற்றிப்பார்க்க, ஆயிரக்கணக்கான சுற்றுலாப்பயணிகள் வருகிறார்கள். மிக உயரத்தில் அமைந்திருப்பதால் இங்கு ஆக்சிஜன் அளவு குறைவாக இருக்கும். எனவே, சுற்றுலாப்பயணிகள் தண்ணீர் அதிகமாக குடிப்பார்கள். தண்ணீரில் இருக்கும் ஆக்சிஜன், உடலுக்கு தேவையானதாக இருக்கும். இதனால், இங்கு சுற்றுலாப்பயணிகள் பயன்படுத்தி வீசும் காலி தண்ணீர் பெட் பாட்டில்களின் எண்ணிக்கை மிக அதிகம்.


செந்தில் சங்கர்

இது அப்பகுதியின் சுற்றுச்சூழலை பாதிக்கும் அபாயத்தை ஏற்படுத்தியது. நிலைமையை உணர்ந்த இந்திய ராணுவம், பெட் பாட்டில்களை சேகரித்தது. பின்னர் அரவை இயந்திரம் மூலம் பாட்டில்களை அரைத்தது. அந்த துகள்களை என்ன செய்யலாம் என்று யோசித்த போது, அவற்றை ஆடைகளாக மாற்றலாம் என்ற திட்டத்தில் எங்களுக்கு அழைப்பு விடுத்தது இந்திய ராணுவம்” என்றவர் தொடர்ந்தார்.

“சியாச்சின் பகுதி இந்திய ராணுவ பிரிகேடியராக உள்ள ஹிமான்சுஹட்கர் உடன் சந்திப்பு நடந்தது. ஆடைகள் தயாரிப்பு தொடர்பாக முடிவு செய்யப்பட்டது. தொடக்கத்தில், லடாக், சியாச்சின் முகாம்களில் இருந்து விடுமுறைக்கு தமிழ்நாடு வரும் ராணுவ வீரர்கள், அரைக்கப்பட்ட பெட் பாட்டில் துகள்களை எடுத்துவந்து எங்களிடம் கொடுப்பார்கள். நாங்கள் அதை ஜாக்கெட், ஸ்கார்ப் செய்து, லடாக் ராணுவ முகாம் அலுவலகத்திற்கு அனுப்பிவைப்போம். இப்போது ரயில், விமானம் மூலம் பெட் பாட்டில் துகள்கள் வந்து சேர்ந்துவிடுகிறது.

இதில் இருந்து நாங்கள் தயாரித்து அனுப்பும் ஆடைகள், லடாக், சியாச்சின் பகுதிகளில் சுற்றுலாப்பயணிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் கிடைக்கும் வருவாயை லடாக் பகுதியின் வளர்ச்சிக்காகவும், அப்பகுதி பழங்குடியின மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் செய்யவும் பயன்படுத்துகிறது இந்திய ராணுவம்.

இதுவரை ஒரு டன் அளவிலான பெட் பாட்டில் துகள்களை 300க்கும் மேற்பட்ட ஆடைகளாக மாற்றியிருக்கிறோம். இந்திய ராணுவத்திற்கு நேரடியாக ஆடைகள் தயாரித்துக் கொடுப்பதாலும், அதன் வருவாய் நல்ல காரியத்திற்கு பயன்படுத்தப்படுவதாலும், விற்பனை விலையில் 15 சதவீதம் குறைத்து கொடுக்கிறோம். கடுமையான குளிர் சூழலில் நாட்டை பாதுகாக்கும் ராணுவத்தினர், அங்குள்ள சுற்றுச்சூழலை பாதுகாக்க எடுத்துவரும் முயற்சியில் நாங்களும் பங்கெடுத்துள்ளோம் என்பது எங்கள் நிறுவனத்திற்கான பெருமை மட்டுமல்ல, தமிழ்நாட்டிற்கு கிடைத்த கவுரவம்” என்று பெருமிதத்துடன் சொல்லி முடித்தார் செந்தில் சங்கர்.

**– ஜெய கணேசன்**

### பரிசான ஜாக்கெட்

கடந்த ஆண்டு கர்நாடகா மாநிலம் பெங்களூருவில் நடந்த இந்திய எரிசக்தி வார விழாவில், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (ஐஓசி) நிறுவனம், எக்கோலைன் ஜாக்கெட்டை பிரதமர் மோடிக்கு வழங்கியது. இந்த ஜாக்கெட்டைதான் பார்லிமென்ட்டிற்கு அணிந்துவந்திருந்தார் பிரதமர்.



### விலை குறைவு

“எக்கோலைன் ஆடையை ரூ.2 ஆயிரத்திற்கு கீழான விலையில்தான் வழங்கி வருகிறோம். ஆடைகளுக்கு ஏற்ப விலை குறையும். இதனால் ஆர்டர்கள் அதிகமாக வருகின்றன. எப்படி குறைவான விலையில் விற்பனை செய்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். உற்பத்தி செலவு அதிகமாக இருந்தாலும், மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவே விலைகுறைவாக கொடுக்கிறோம்” என்கிறது இந்த நிறுவனம்.



உள்ளே...

வுட்ஸ் பாப்கார்ன்

### பிளாஸ்டிக் குறையுங்கள்

நடிப்பது மட்டுமே தனது வேலை என்று இருந்துவிடாமல், சூழல் குறித்த அக்கறையுடனும் செயல்படுகிறார் சாண்டல்வுட் நடிகையான தன்யா ராம்குமார். தான் சார்ந்திருக்கும் திரைத்துறையில் பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறார் இவர்.

“அன்றாட வாழ்க்கையில் பிளாஸ்டிக் பைகள் மற்றும் கழிவுகளைக் குறைப்பதற்காக செயல்பட வேண்டிய நேரம் இது. திரைப்பட படப்பிடிப்புகளில் பிளாஸ்டிக் கழிவுகளைக் குறைக்க வேண்டும். இது உடனே நடந்துவிடாது என்றாலும், முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். சினிமா பிரபலங்கள், பிளாஸ்டிக் கழிவுகளுக்கு எதிராக செயல்பட்டால், அவர்களின் ரசிகர்களையும் ஊக்குவிக்க முடியும். தனிநபராக சுற்றுச்சூழல் மாசுபாட்டை தீர்க்க முடியாது. துணிப்பை, சணல் பை பயன்படுத்துங்கள். சுற்றுச்சூழல் நமக்கு மிகவும் முக்கியம்” என்கிறார் தன்யா.